# சங்ககால பாதுகாப்பு அரண்கள் பற்றி - ஓர் ஆய்வு

**முனைவர் C. செல்லப்பாண்டியன்**
உதவிப்பேராசிரியர்
வரலாற்றுத் துறை, தேவாங்கர் கலைக்கல்லூரி, அருப்புக்கோட்டை.

**முன்னுரை:**

ஒரு அரசன் தனது நாட்டில் காடு, மலை, ஆறு, கடல், உணவுப்பண்டங்கள், கைத்தொழில் என பல் துறைகளிலும் சிறந்து விளங்கக் கூடிய சூழல்களைப் பெற்றிருக்கலாம். ஆனால் நாட்டின் பாதுகாப்பு என்பது மேற்கூறியவற்றை நிலைநிறுத்தக் கூடிய பாதுகாப்புசூழலை நாட்டின் வேந்தன் பெற்றிருக்கவேண்டும். தவறும் பட்சத்தில் மேற்கூறிய வளங்கள் அனைத்தும் பாழாகிவிடும். ஒருநாட்டின் மக்களின் தேவைகளை பொறுப்புடன் அணுகி அவர்களின் நிறைகுறைகளை நீக்கக்கூடிய தலைவனே அரசன் ஆவான். அவ்வரசனின் தலையாய பொறுப்பகளுள் நாடடின் பாதுகாப்பும் இன்றியமையாத ஒன்றாகும். அத்தகைய நாட்டின் பாதுகாப்பை நிலைநிறுத்தும் அரண்களைப் பற்றி விரிவாகக் காண்போம்.

**பாதுகாப்பு அரண்கள்:**

குடிகளுக்காகவே அரசன் என்ற கருத்து சங்ககாலத்தில் நிலவிவந்தது. குடிகமகனின் கருத்துக்களை கேட்டறிந்து அதற்கேற்ப ஆட்சிபுரிவது அரசனின் கடமையாகும். குடிமக்களுக்கு அரசன் ஒரு குடை போன்று நின்று ஆட்சி செய்ய வேண்டும். நாட்டின் பாதுகாப்பு அரசன், மதிலரண், நிலவரண், நீரரண், காட்டரண், மலைஅரண் என சங்ககால நாடுகளைக் கொண்டிருந்தன. அவற்றை விரிவாக இங்கு காண உள்ளோம்.

**அரசன்:**

ஒரு நாட்டின் அரசன் அறநெறியோடு நான்கு வகை படைகளான குதிரைப்படை, காலாட்படை, யானைப்படை, தேர்ப்படை எனபடைகளைக் கொண்டு சங்ககால மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். மேற்கூறிய நால்வகைப் படைகளை வைத்திருந்தால் மட்டும் வெற்றி கிடைத்துவிடாது. அறவழியாகவும் வெற்றிகிட்டச் செய்யலாம் என்று காலங்கள் தோறும் புலவர்கள் அறிவுறுத்திவருகின்றனர்.

**“கடுஞ்சினத்த கொல்கலிறும் கதழ்பரிய கலிமாவும்**
**நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல்மறவரும் என்**
**நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட**
**அறநெறி முதற்றே அரசின் கொற்றம”**

என்னும் புறநானூற்றுப் பாடல் பாண்டியமன்னன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனுக்கு மதுரைமருதன் இளநாகனார் பாடியபாடலார் கூறியதாகும். நாட்டில் மழைவளம் குன்றினாலும் எந்தவகையிலேனும் குடிகளின் துன்பம் நீக்கபாடுபடவேண்டும். அவர்களுக்குஅரண் போன்று நின்று காக்க வேண்டும்.

**போர்முறை:**

சங்ககால போர் முறைகள் பற்றி தொல்காப்பியர் தனது தொல்காப்பிய புறத்திணையியலில் நன்கு விளக்கிக் கூறுகின்றார். பதிற்றுப்பத்து, புறநானூற்று பாடல்களிலும் போர்த்துறைபற்றி கூறப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் மீது படையெடுக்க விரும்புகிற வேந்தன் அந்நாட்டின் ஆனிரைகளையும், பெண்களையும், அந்தணரையும், பிணியாளரையும் நாட்டைவிட்டு வெளியேற்றி பாதுகாப்பான இடத்தில் அமர்த்திவிட்டுபோர் நடவடிக்கைகளில் ஈடுபடுவான். அதனைக் கூட கருத்திற் கொள்ளாமல் ஆணிரைகளை கவர்வர். ஆனிரைகளை கவர்தலும் பின்பு அதனைமீட்டலுமான போர் முறைகள் அக்காலங்களில் நடந்தேறின. அதேபோன்று மதில்களை முற்றுகையிடுதலும் அதனைக் காத்தலும் ஓர் போர்முறையே. இம்முறைகளில் வெட்சி முதலிய பூக்களை சூடிக்கொண்டு போர் புரிவர். இறுதியாக வெற்றிபெறும் அரசன் வாகைப் பூவைசூடிக் கொள்வான்.

**அரசின் வருவாய்:**

சங்ககாலத்தில் அரசிற்கு மூன்று முக்கிய வருவாய்கள் வசூல் செய்யப்பட்டன. அவற்றில்

முதலாவதாக குடிமக்களிடம் இருந்து பெறும் வரி, இரண்டாவதாக வாணிகப் பொருள்களுக்குரியவர், மூன்றாவதாக சிறிய அரசுகளிடம் இருந்து வசூல் செய்யப்படும் திறை (கப்பம்) இந்த மூன்று முதன்மை வரிகளை வசூல் செய்து நாட்டுக்குடிகளை அரண்போல் நின்று நேர்மை குன்றாது ஆட்சி செய்வதோடு எதிரி நாடுகளிடமிருந்து காத்தும் நிற்கவேண்டும்.

**மதில் அரண்:**

சங்ககாலத்தில் மதிலுக்கு எயில், இஞ்சி,புரிசை போன்ற பெயர்களும் உண்டு.

**புரிசை:**

புரிசை என்பது புரிதல், வளைதல், சூழ்தல் போன்ற பொருளமைவில் நாட்டையே சூழ்ந்து காணப்படுவதால் புரிசை என மதிலை அழைப்பர்.

**எயில்:**

மதிலரண் போரில் வீரர்கள் வில்லை மதில் மேடை மீது நின்று மறைந்து அம்பு எய்வதற்குரிய துளைகளை உடைமையால் எயில் எனப் பெயர் பெற்றது.

**இஞ்சி:**

செம்பை உருக்கி சாந்தாக குழைத்து செங்கல்லினால் திண்மையாகக் கட்டப்பட்டமையால் இஞ்சுதல், இறுக்குதல் பொருளில் இஞ்சி என்ற பெயரைப் பெற்றது மதிலரண். இதனை கம்பரின் பாடல் **“செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்”** என்று குறிப்பிட்டு உள்ளார். மேலும் புரிசை பற்றிய புறநானூறும் கீழ்வரும் பாடலில் “செம்புபுனைந்தியற்றிய சேணெடும் புரிசை” என்று கூறப்பட்டுள்ளது. மதில்களின் உயரம், அகலம், வலிமை, அருமை போன்ற இயல்புகளை உடையதால் இருக்க வேண்டும் என்பதை உயர்வகலம் திண்மை அருமையிந் நான்கின் குறளில் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். சிலப்பதிகாரம் மதுரையின் புறமதிலில் இருந்தபொறிகளும், கருவிகளும் அதிகம் என்று குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் சங்க காலத்தில் மதுரையில் மதிலரண்கள் இருந்ததும் அங்கு மதிலைக் காக்க கருவிகளும் இருந்தன என்பது உறுதியாகிறது.

**நிலஅரண்:**

எதிரி நாட்டவர் மதிலைப் பற்றாதிருக்கும் பொருட்டு மதிலுக்கு வெளியே பொட்டலாக வெற்று நிலமாக கொடுமையான நிலத்தைவிட்டு வைப்பர். இது நிலவரண் எனப்பட்டது. இந்த வெற்று நிலங்கள் வெகு தூரத்திற்கு விட்டு வைப்பதால் பகைவர் நாட்டினர் படைகளை நிறுத்தி போர் புரிய ஏதுவாக இருக்காதாம் என்ற எண்ணத்துடன் நில அரணை வைத்திருந்தார்கள் நமது முன்னோர்கள். ஆகவே இதுவும் ஒரு வகை அரண் எனப்பட்டது.

**நீர் அரண்:**

நீர் அரண் என்பது மதிலுக்கு அப்பால் ஆறு, அகழி, கடல், நீர் சேமிக்கும் அணை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்த அரணால் எதிரி நாட்டு வேந்தர்கள் படையெடுக்க நினைக்கும் போதெல்லாம் ஆற்றின் போக்கையும், கடலின் சீற்றத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கும். இவையும் ஒருவகையில் அரணே.

**காட்டரண்:**

காடு அரண் என்பது வீரர்கள் எதிரி நாட்டு பகைவர்களுக்குத் தெரியாமல் மறைந்திருக்கவும், பகைவர்களை மறைந்திருந்து தாக்கவும், தடுக்கவும் ஏற்ற முள்மரங்கள் அடர்ந்தகாடு மிக உதவியாக இருக்கும். ஆகவே பகைவர்களை சோம்பலாக்கி எதிர் தாக்குதலை குறைக்கும். ஆகவே இவையும் ஒருபாதுகாப்புஅரணே.

**மலையரண்:**

பகைவர்கள் பலரால் ஏற முடியாத காரணத்தாலும் போரின் போது படைவீரர்களுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்படாதவண்ணம் உணவுப்பொருள் கொண்டு செல்ல முடியாத சூழல் ஏற்படும். எனவே தான் சங்ககால குறுநில மன்னர்கள் குன்றுகளிலும், மலைகளிலும் தனது நாட்டை நிர்மாணித்துக் கொண்டனர். மலைகளையுடைய நாட்டிற்கு அம்மலைகளாலேயே பெயரும் வழங்குவதும் உண்டு.

**அரசனின் கடமைகள்:**

ஆற்றுப்போக்கு உடைய நாட்டை ஆளும் மன்னன் அவ்வாற்றை அகலப்படுத்துதலும், ஆழம் ஆக்குதலும், கரைகளை உயர்த்துவதும், கால்வாய்கள் வெட்டுவதும், அணைக்கட்டி நீர் பிரிந்துபாயும்படி உருவாக்கிக் கொடுத்தல் ஒவ்வொரு நாட்டின் அரசர்களுக்கும் கடமையாகும். இதனை கரிகால் பெருவளத்தான் காவிரிக்கு கரைகட்டுவித்தான் என்று பிற்கால கலிங்கத்துப்பரணி கூறுகின்றது. அவன் குளந்தொட்டு வளம் பெருக்கினார் என்ற செய்தியை பட்டினப்பாலை பின்வரும் பாடல் வரிகளில் இவ்வாறு,

**"காடு கொன்று நாடாக்கிக்**
**குளந் தொட்டு வளம் பெருக்கி"** – என எடுத்துரைக்கிறது.

சங்ககால மன்னர்கள் நீரையும், நிலத்தையும், கடலையும் அவனது நாட்டிற்கு அரண்களாக பயன்படுத்திக் கொண்டனர்.

**முடிவுரை**:

சங்ககால மன்னர்கள் காடுகளையும், மலைகளையும், ஆறுகளையும், கடல் சீற்றத்தையும், மதில் மூலமும் அக்கால சூழலுக்கு ஏற்ப பாதுகாப்பு அரண்களாக மாற்றிக் கொண்டார். இவ்வரண்கள் வரலாற்றில் எண்ணற்ற மாற்றங்கள் நிகழ ஏதுவாக இருந்துவந்துள்ளது என்று கூறுவது மிகையாகாது.

**நூற்பட்டியல்:**

1. லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், சங்ககால தமிழர் வாழ்வு, சென்னை பல்கலைக்கழகம், சென்னை - 1964.
2. கம்பராமாயணம், பாலகாண்டம், அரசியல் படலம் - 10
3. திருக்குறள் - 389
4. புறநானூறு - 72
5. கம்பராமாயணம், கும்பகர்ணன் வதைப் படலம் - 160
6. சிலப்பதிகாரம், காதை - 15
7. பட்டினப்பாலை, வரி - 283
8. பெரும்பானாற்றுப்படை, வரி - 80-81